[1981 ஏப்ரல் 20

திரு. மு. அரங்கநாதன் : கோத்தகிரி பகுதியில் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தாலுகா அலுவலகம் சிறிய ஒரு அறையில்தான் நடக்கிறது. தாலுகா அலுவலகத்திற்கு வருகிற மக்கள் காற்றிலும் மழையிலும் வெளியே நிற்க வேண்டியிருப்பதால் அதன் அவசர அவசியத்தைக்கருதி உடனடியாக அந்தத் தாலுகா அலுவலகக்கட்டடம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்களை அழைத்து விரைவில் அடிக்கல் நாட்டி கட்டடமும் கட்டப்படும்.

கரும்பின் மீதான கொள்முதல் வரி.

*வினா எண். 797—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பின் மீது கொள்முதல் வரியாக (பர்சேஸ் டாக்ஸ்) மில்களிடமிருந்து அரசு டன் ஒன்றுக்கு எவ்வளவு வசூல் செய்கின்றது ?

(ஆ) இந்தக் கொள்முதல் வரியைக் குறைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கரும்பின் மீது கடைசி கொள்முதல் விலையின் பேரில் 12 சதவீத கொள்முதல் வரி விதிக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 12 சதவீதம் பர்சேஸ் டாக்ஸ் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் சில மில்களிடமிருந்து 23 சதவீதம் கூட வசூலிக்கப்படுகிறது என்று சொல்வது உண்மைதானா ? அநேகமாக பல மாநிலங்களில் 10 சதவீதத்திற்கு மேல் இந்த வரி வசூல் இல்லை, சில இடங்களில் இந்த 10 சதவீதத்துக்குக் கீழேகூட வசூலிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே நம் மாநிலத்திலும் இதை 10 சத

வீதமாகக் குறைத்து விவசாயிகளுக்கு அந்தப் பணம் சேருகிற வகையில், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பாதுகாப்பு அளிக்கும் அளவில், விவசாயிகளுக்குச் சேருகிற அளவில் இதைக் குறைத்துக் கொடுக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மற்ற மாநிலங்களில் எவ்வளவு வரி வசூலிக்கப்படுகிறது என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தில் 6 சதவீதம், 7 சதவீதமாக இருந்தது இப்போது 12 சதவீதமாக ஆகியிருக்கிறது. இது இன்றல்ல, 1974-ல் இருந்து ஆக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிலையில் இந்தச் சர்க்கரை உற்பத்தியாளர்கள் அதிகமாக லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அரசாங்கம் வரி போடலாமா, அந்த வரியை ஏழை மக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது வரி குறைப்புக்கு வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : கரும்பாலைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் வரி வசூலிப்பதைத்தள்ளி வைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டு அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை இந்த பர்சேஸ் டாக்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1977–78, 1978–79 ஆண்டுகளில் லாபம் இல்லை என்ற முறையில் பர்சேஸ் டாக்ஸ் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு அது தள்ளி வைக்கப்பட்டது. ஆனால் இன்று 3–12–80-ல் எல்லோரையும் கூப்பிட்டுப் பேசி 20 சதவீதம் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு அவர்கள் கட்டியிருக்கிறார்கள். அந்த ஆண்டிலிருந்து மீண்டும் அவர்கள் 5 சதவீதம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-20)

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை மூலம் அரசுக்கு வருமானம் வருவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பர்சேஸ் டாக்ஸ் பற்றியது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை ? தனியார் சர்க்கரை ஆலைகள் எத்தனை இருக்கின்றன? தள்ளி வைக்கப்பட்ட பர்சேஸ் டாக்ஸை வசூல் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்தேன். 20 சதவிகிதம் உடனே கட்டச் சொல்லி, கட்டியிருக்கிறார்கள். மீண்டும் 5 சதவிகிதம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 10 ; தனியார் சர்க்கரை ஆலைகள் 9 ; தமிழக அரசுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகள் 2, ஆக மொத்தம் 21 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளிவைக்கப்படாத ஆண்டுகளில் அந்த வரி முறையாக வசூலிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளிவைக்கப்படாத ஆண்டுகளில் அந்த வரிகள் முறையாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பர்சேஸ் டாக்ஸ் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 2 கோடிக்கு மேல் வரும்.

## ஆரம்பக் கல்வி முறையை மாற்றும் திட்டம்.

*வினா எண். 798—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி முறையை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?